**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 385/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 7 |
| Name : | மாதேஸ்வரன் |
| Father's Name/Husband Name: | செம்மொழிசெல்வன் |
| Village : | செஞ்சேரி |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 26/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி வெள்ளைச்சாமி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது செஞ்சேரி கிராமத்தில் வசித்து எச்டிபி வங்கியில் கலெக்சன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 இளவரசியை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. நான் கலெக்சனுக்கு செல்லும் பொழுது MVK நகரில் போலிசார் இருந்தார்கள். என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்க்கச் சென்றேன். அப்போது போலிசார் வீட்டு பிரச்சனை குறித்து படம் வரைந்து விசாரணை செய்திருந்தார்கள். அதை நான் நேரில் பார்த்ததற்கு சாட்சி கையொப்பம் கேட்டார்கள். அப்போது நானும் என்னுடன் வந்த சரண்குமார் என்பவரும் அதில் கையொப்பம் போட்டோம். அப்போது நானும் சரண்குமாரும் எழுதப்பட்டிருந்த தாளில் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தன்று நான் எச்டிபி வங்கியில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். MVK நகரில் நான் வேலை சம்மந்தமாக வசூல் செய்ய போனேனா என்றால் ஆமாம். என்றைக்கு எத்தனை மணிக்கு போனேன் என்றால் 08.03.2025ம் தேதி மாலை 6.50 லிருந்து 7 மணியிருக்கும். நான் வசூல் செய்ய சென்ற கஸ்டமர் எந்த பகுதியில் வசிக்கிறார் என்றால் அதே பகுதியில் தான் வசிக்கிறார். அந்த கஸ்டமரை சந்தித்தேனா என்றால் அவர் அங்கு இல்லை என்பதால் சந்திக்கவில்லை. அ.சா.1 இளவரசியை தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது எதேச்சையாகத் தான் நான் அவ்வழியாக சென்றேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னிடம் கையெழுத்து பெற்ற தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல நான் படித்துப் பார்த்தேன். எங்கு வைத்து கையொப்பம் பெற்றார்கள் என்றால் அ.சா.1 இளவரசியின் வீட்டில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். அப்போது என்னுடன் கையொப்பம் போட்ட சரண்குமாரும் அதே வீட்டில் தான் இருந்து என்னுடன் கையெழுத்து போட்டாரா என்றால் ஆமாம். மொத்தம் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் ஒரு கையொப்பம். எத்தனை போலிசார் இருந்தார்கள் என்றால் இரண்டு போலிசார். காவல் நிலையத்திற்கு வரச் சொல்லி கையெழுத்து பெற்றார்களா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் வைத்து எழுதாத வெள்ளைத்தாளில் கையெழுத்து பெற்றார்கள் என்றாலும் அ.சா.1 இளவரசி கேட்டுக் கொண்டதற்கிணங்க எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.